ஒரு மதிப்பெண் வினா வங்கி – பிப்ரவரி - 2015

XII – கணக்கு பதிவியல்

காலம்: 1.30 மணி மதிப்பெண்:100

1. உள் திருப்பம் கழிக்கப்படுவது----------
2. முதல் மீதான வட்டி கூட்டப்படுவது---------
3. 01.04.2013 இருப்பாய்வில் வங்கி கடன் ரூ.10,00,000. வங்கி வட்டி வீதம் 11% வட்டி செலுத்தியது ரூ.60,000. 31.03.2014 அன்று நிலுவையில் உள்ள வட்டி-------
4. இருப்பாய்வில்இயந்திரத்தின்மதிப்பு ரூ.3,00,000ஆண்டுஇறுதியில்10%தேய்மானம்நீக்கப்பட்டது,எனில்இயந்திரத்தின் மதிப்பு--------
5. கொடுபட வேண்டிய கூலி ஒரு------
6. வருமானவரி செலுத்தியது கழிக்கப்படுவது-----லிருந்து
7. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு------
8. 01.04.2013 அன்று பற்பல கடனாளிகள் ரூ.24,600. 31.03.2014 அன்று பற்பல கடனாளிகள் ரூ.29,950. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.34,750. எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை.--------
9. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது ஒரு-----ஆகும்.
10. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது-------
11. இயந்திரத்தின் மதிப்பிலிருந்து நீக்கப்பட்ட தேய்மானத்தொகை பற்று செய்யப்படும் கணக்கு------
12. குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம் --------
13. தேய்மானத்தொகை ரூ.18,000 சொத்தின் அடக்கவிலை ரூ.2,00,000 எனில் தேய்மான விகிதம்-------
14. நிலைச் சொத்தை விற்பதால் ஏற்படும் இலாபம் பற்று செய்யப்படும் கணக்கு--------
15. அனைத்து இலாப விகிதங்களும்------ஆகக் கொடுக்கப்படும்
16. நீர்மைப் பொறுப்புகள் என்பது-------
17. தொடக்கச் சரக்கிருப்பு ரூ.50,000, கொள்முதல் ரூ.2,25,000 மற்றும் இறுதிச்சரக்கிருப்பு ரூ.20,000. எனில் விற்ற பொருளின் அடக்கவிலை-----ஆகும்.
18. மொத்த விற்பனை ரூ.6,65,000. மொத்த இலாபம் ரூ.1,10,000 விற்றபொருளின் அடக்க விலை-------ஆகும்
19. விற்றபொருளின் அடக்க விலை ரூ.3,00,000. சராசரி சரக்கிருப்பு ரூ.1,00,000 சரக்கிருப்பு விற்பனை விகிதம்-------ஆகும்.
20. சாதாரணபங்குமுதல் ரூ.7,20,000காப்பும்மிகுதியும் ரூ.2,80,000 கடனீட்டும் பத்திரம் ரூ.5,00,000. உரிமையாளர் நிதி------ஆகும்
21. ஒரு நிறுவனத்தின் நடப்பு சொத்துகள் ரூ.1,80,000 நடப்பு பொறுப்புகள் ரூ.60,000. எனில் நடப்பு விகிதம்------ஆகும்.
22. விகிதங்கள் வெளிப்படுத்தும் விதம் (முறைகள்) ------.
23. நிலம், கட்டிடம் வாங்கியது-----எடுத்துக்காட்டாகும்.
24. ரொக்கத்திட்டப்பட்டியலில் கையாள்வது-------
25. திட்டப்பட்டியல் என்பது-------காலத்திதற்கான மதிப்பீடு ஆகும்.
26. கூட்டாண்மையில், கூட்டாளிகள் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்வது----விகிதத்தில்.
27. உடன்பாடு இல்லாத நிலையில் இலாபநட்டம் பகிரப்படுவது……
28. கூட்டாண்மையில் வங்கித் தொழிலாயின் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை------
29. ஒவ்வொரு மாத இறுதியிலும் எடுப்பு எடுக்கும் பொழுது வட்டிக்குரிய சராசரி காலம்------
30. கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இல்லாதபோது கூட்டாளிகள் வழங்கும் கடன் மீது------------ % வட்டி பெறுவர்.
31. முதல் மீது வட்டி கணக்கிடப்பதுவது------
32. இருப்ப நிலைக்குறிப்பில் தோன்றும், இலாப நட்ட க/கு மற்றும் பொதுக்காப்பு மாற்றப்படுவது------
33. புதிய கூட்டாளியை சேர்க்கும் பொழுது, புதிய இலாப விகிதம் கணக்கிடப்படுவது-----
34. புதிய கூட்டாளியை சேர்க்கும் பொழுது, சொத்தின் மதிப்பு குறைவது, பழைய கூட்டாளிகளுக்கு------
35. புதிய கூட்டாளியை சேர்க்குபொழுது, புதிய இலாப விகிதம் கணக்கிடப்படும் விதம்-------
36. ------முறையில் புதிய கூட்டாளி தனது நற்பெயர் பங்காக ரொக்கம் கொண்டு வருவதில்லை.
37. கூட்டாளிகளை சேர்க்கும் போது, சொத்துகள், பொறுப்புகளை மறுமதிப்பீடுசெய்தால் உண்டான இலபத்தை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு------விகிதத்தில் மாற்றப்படும்.
38. X, y மற்றும் z என்ற கூட்டாளிகளின் பழைய இலாபப் பகிர்வு விகிதம் 3:2:1 Y விலகிய பின் புதிய விகிதம்-----
39. ஆதாய விகிதம் கணக்கிடப்படுவது--------
40. விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு ஒரு------
41. நற்பெயர் மதிப்பு ரூ.50,000 ஆக அதிகரிக்கும் போது, பற்று செய்யப்படும் கணக்கு.-------
42. பகிர்ந்து தரா இலாப நட்டங்கள், விலகலின் போது அனைத்துக் கூட்டாளிகளின் கணக்கிற்கு------
43. நிறுமத்தின் பங்குகளை-----வழிகளில் வெளியிடலாம்.
44. நிறுமம் விடுக்கக்கூடிய அதிகபட்ச அழைப்புகளின் எண்ணிக்கை-----
45. அட்டவணை An படி, அழைப்பு முன்பணத்திற்கு செலுத்திடும் வட்டி----ஆகும்.
46. பொதுவாக நிறுமங்கள் பங்குகளை-----தள்ளுபடியில் வெளியிடலாம்.
47. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும்போது அந்நிறமத்தின் பங்கு முதல்-----
48. அழைப்பு நிலுவை, இருப்பு நிலைக்குறிப்பில்-------
49. இருப்பு நிலைகுறிப்பில் முதலினக் காப்பு-----பக்கம் தோன்றும்.
50. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்புநிலைக் குறிப்பின்------பக்கத்தில் தோன்றும்.

51. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ.10 முகமதிப்புடைய 600 பங்குகளை இறுதி அழைப்புப் பணம் ரூ.3 பெறப்படாமைக்காக பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. பின்னர் இப்பங்குகள் பங்கொன்று ரூ.7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது, எனில் முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும் தொகை----ஆகும்.
52. முதல் மீது வட்டி -----கணக்கில் பற்று வைக்கப்படும்.
53. முன் கூட்டிப் பெற்ற வருமானம் இருப்புநிலைக் குறிப்பின் -----பக்கத்தில் தோன்றும்
54. தேய்மானம் இலாபநட்டக் கணக்கில்------பக்கத்தில் தோன்றும்.
55. 31.03.2014அன்றையஇருப்பாய்வின்படிமுதல்ரூ.3,00,000எடுப்புகள் ரூ.30,000ஆகும்.ஆண்டுக்கு6% எடுப்புமீதானவட்டி ரூ.-----ஆகும்.
56. 31.03.2014அன்றையஇருப்பாய்வின்படி பற்பலகடனாளிகள் ரூ.3,15,000 சரிக்கட்டுதலில் வாராக்கடன் ரூ.15,000 வாராஐயக்கடன் ஒதுக்கு 5% ----ஆகும்.
57. பொறுப்புகளை விட கூடுதலாக உள்ள சொத்துக்கள்------ஆகும்.
58. நிலை அறிக்கை முறை------முறை எனவும் அழைக்கப்படும்.
59. ஒரு நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ.1,75,000, சொத்துக்கள் ரூ.3,50,000. அந்நிறுவனத்தின் முதல்-------ஆகும்.
60. ஒரு நிறுவனத்தில் துவக்க முதலுக்கும், இறுதி முதலுக்கும் உள்ள வேறுபாடு----ஆகும்.
61. மாற்றுதல் முறையில், ஒற்றைப் பதிவு முறையை -----முறைக்கு மாற்றப்படுகிறது
62. காப்பீட்டு முனைம முறையில் ஆண்டுதோறும் தேய்மானம் -----ஆகச் செலுத்தப்படுகிறது.
63. ஓவ்வொரு ஆண்டும், சொத்தின் ஏட்டு மதிப்பின் மீது தேய்மானம் கணக்கிடும் முறை------முறை என அழைக்கப்படும்.
64. ஒரு சொத்தின் மொத்த அடக்க விலைரூ.1,00,000 குறைந்து செல் மதிப்பு முறையில் 10% தேய்மானம் நீக்கப்பட்டால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம்-------
65. நீர்மை விகிதத்தை-----எனவும் அழைக்கலாம்.
66. 100%ல் இயக்க இலாப விவிதத்தை கழித்தால்-----விகிதம் கிடைக்கும்.
67. நீர்மைப் பொறுப்புகள் என்பது நடப்பு பொறுப்புகளில் இருந்து----கழித்த தொகையாகும்.
68. விகிதங்கள்------முன் கணிப்புக்கு உதவுகிறது.
69. மொத்த இலாபம் = ________-- விற்ற பொருளின் அடக்க விலை.
70. -----சொத்துக்கள் எளிதாக ரொக்கமாக கூடியவை.
71. மொத்த விற்பனை ரூ.6,70,000 ஆக உள்ளபோது ரொக்க விற்பனை ரூ.4,20,000 எனில் கடன் விற்பனை ரூ.----ஆகும்.
72. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின் ----இருப்பாகும்.
73. ரொக்கத் திட்டப்பட்டியல்----என்றும் அழைக்கப்படுகிறது.
74. மார்ச் மாத தொடக்க இருப்பு ரூ.5,550, அம்மாதத்தில் மொத்த ரொக்க பெறுதல்கள் ரூ.7,450 மற்றும் மொத்த ரொக்க செலுத்தல்கள் ரூ.3,000 எனில் ஏப்ரல் மாத தொடக்க இருப்பு-----ஆகும்.
75. கூட்டாண்மையில் ஈடுபடும் நபர்களை ஒட்டு மொத்தமாக ----என அழைக்கலாம்.
76. -------முதல் ஏற்பாட்டில் நடப்புக் கணக்குகள் தயாரிக்கப்பட மாட்டாது.
77. நற்பெயர் ஒரு-------சொத்து அல்ல.
78. சாதாரண இலாபத்தை விட சராசரி இலாப மிகுதிக்கு----என்று பெயர்.
79. கூட்டாண்மையின் மிக முக்கிய சிறப்பியல்பு பரஸ்பர-----முகமை ஆகும்.
80. --------குறிப்பிட்டிருந்தால் மட்டுமே கூட்டாளிகளுக்கு சம்பளம் வழங்கப்படும்.
81. கூட்டாண்மை நிறுவனத்தில் உரிமையும், மேலாண்மை செய்வரும்------
82. புதிய கூட்டாளியை சேர்க்கும் போது----கூட்டாளிகளின் முதல் மாற்றியமைக்கப்படும்.
83. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிப்பது, அது-----இனமாகும்.
84. பதிவுபெறா பொறுப்புகளை கணக்கேடுகளில் கொண்டு வருவது-----இனமாகும்.
85. பழைய பங்கிலிருந்து தியாகத்தை கழித்தால் கிடைப்பது--------
86. மறுமதிப்பீட்டின்போது, புதிய கூட்டாளி அவரின் பங்காக ரொக்கம் கொண்டு வருவது-----
87. சொத்து, பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்வதால் ஏற்படும் ----ல் புதிய கூட்டாளிக்கு எவ்வித பொறுப்பும் கிடையாது.
88. புதிய விகிதத்தில் இருந்த பழைய விகிதத்தை கழித்தால் கிடைப்பது--------விகிதம்.
89. விலகும் கூட்டாளிக்கு சேரவேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லையெனில், அவருடைய-----கணக்கிற்கு மாற்றப்படவேண்டும்.
90. கூட்டாளி விலகும் போது, மறுமதிப்பீட்டு இலாபத்தை-----கூட்டாளிகளால் பகிரப்படும்.
91. கூட்டாளிகளுக்குள்உடன்பாடு இல்லாதபொழுது,கூட்டாளிகள் நிறுவனத்தில் வழங்கிய கடன்மீது------சதவீதம் வட்டி பெறுவர்.
92. கூட்டாளி விலகலின் போது, குவிந்த காப்பு நிதியை அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்குகளுக்கு ----விகிதத்தில் மாற்றப்படவேண்டும்.
93. P,Q,R என்ற கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப, நட்டம் பகிர்ந்து வந்தனர். நற்பெயரின் மதிப்பு ரூ.6,000 என மதிப்பிடப்பட்டது. Q விலகலின் போது நற்பெயர் மதிப்பு அவருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படும் தொகை ரூ.------
94. பத்திர முனைமம் இருப்பு நிலைக்குறிப்பில்-----பக்கத்தில் காட்டப்படும்.
95. காப்பு முதல்-----போது மட்டும் வெளியிடப்படும்.
96. இரு அழைப்புகளுக்கு இடையே உள்ள கால இடைவெளி-----
97. ----என்பது நிறுமத்தால் வெளியிடக் கூடிய அதிகபட்ச முதல் தொகை ஆகும்.
98. லெட்சுமி வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.100 வீதம் 50,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 35,000 பங்குளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக்கொண்டால் அந்நிறுவனத்தின் ஒப்பிய முதல் ரூ.---------ஆகும்
99. பொது வெளியீடு------நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை.
100. எஞ்சிய விண்ணப்பத்தொகையில் ஒதுக்கீட்டிற்கு சரிக்கட்டிக் கொள்ளக்கூடிய ஒதுக்கீடு -----ஆகும்.